# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1983, டிசெம்பர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, டிசெம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

*விலை : சதம் 90* *தபாற் செலவு : சதம் 60*

## 1983 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, உள்ளூராதிகார சபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1983, திசெம்பர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 53/83
1592

**உள்ளூராதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தையும் 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் தேர்தல்கள் சட்டத்தையும், மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தையும், நகரசபைகள் கட்டளைச்சட்டத்தையும் திருத்துவதற்கும், உள்ளூராதிகார சபைகளுக்குரிய குறித்த சில தேர்தல்களையும் உள்ளூராதிகார சபைகளின் குறித்த சில உறுப்பினர்களது செயல்களையும் செல்லுபடியாக்குவதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப்பெயர்.**

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, உள்ளூராதிகாரசபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### உள்ளூராதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்திற்கான திருத்தங்கள்

**262 ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. இச்சட்டத்தின் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் உள்ளூராதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம், அதன் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (v) ஆம், (vi) ஆம் உட்பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(v) (அ) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும், 1970, நவம்பர் 18 ஆந் தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்கு அல்லது அடுத்துப்பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை; அல்லது

(ஆ) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் (அ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு பதவிக்கு அத்தேதியன்று ஏற்புடைத்தாகும் சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் முதலிற் கூறப்பட்ட தொடக்கச் சம்

பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதே னும் உத்தியோகத்தை,

வகிக்கின்ற ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒருவர்; அல்லது

(vi) (அ) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப் பட்டதும் 1970, நவம்பர் 18 ஆந் தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண் டொன்றுக்கு 7,200 ரூபாவுக்கு அல்லது அடுத்துப் பின்ன ரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக் குக் குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை; அல்லது

(ஆ) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப் பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று அதற் கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் (அ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு பதவிக்கு அத்தேதியன்று ஏற்புடைத்தாகும் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் முதலிற்கூறப்பட்ட தொடக்கச் சம் பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதே னும் உத்தியோகத்தை,

வகிக்கின்ற ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவர்;"; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்துக்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும்—

"ஆயின் இதனகத்து அடங்கியுள்ள எதுவும்—

(i) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப் பட்ட பதவியொன்றின் விடயத்தில், அத்தேதி யன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதே னும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் ஏதே னும் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத் தகைய வேறு தொகைக்குக் குறையாததும்; அல்லது

(ii) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக் கப்பட்ட பதவியொன்றின் விடயத்தில், அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று (i) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு பதவிக்கு ஏற்புடைத்

தான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப்பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் முதலிற் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததும்,

ஆன பதவியொன்றை வகிக்கின்ற ஆள் ஒருவர், தேர்தல் நேரத்தில் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்டிராத அல்லது அத்தகைய தேர்தலுக்கு நேர்முந்திய ஓராண்டுக் காலப்பகுதியின்போது தொழிலுக்கமர்த்தப்பட்டிராத உள்ளூராதிகார சபைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு அவர் நாடினால், அவருக்கு விசாலித்தல் ஆகாது ; அல்லது ".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

" (4) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்படவுள்ள வேட்பாளர் ஒவ்வொருவரினதும் எழுத்திலான சம்மதம் நியமனப் பத்திரத்தில் புறக் குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு வேட்பாளரினால், விடயத்திற்கேற்றாற் போன்று, செய்து கைஒப்பமிடப்பட்ட அல்லது மொழிந்து கைஒப்பமிடப்பட்ட அரசியலமைப்புக்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான, விடயத்திற்கேற்றாற் போன்று, சத்தியமொன்று அல்லது உறுதியுரையொன்று அந் நியமனப் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தலும் வேண்டும். ".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

" (ஈ) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளரின் சம்மதம் நியமனப்பத்திரத்தில் புறக் குறிப்பிடப்படாதிருக்கின்றவிடத்து அல்லது ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர்களின், அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியம் அல்லது உறுதியுரை நியமனப்பத்திரத்துடன் இணைக்கப்படாதிருக்கின்றவிடத்து ; அல்லது ".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அ என்னும் பிரிவு அப்பிரிவின் (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

" (5) அத்தகைய தகவல் கிடைக்கப்பெற்றதன்மீது, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென, அவ்வதிகார சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தகவுடையவரான ஆளொருவரைப் பெயர்குறித்து

நியமனம் செய்யுமாறு, அமைச்சர், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரை அழைத்தல் வேண்டும். அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரினால் இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட பெயர்குறித்த நியமனமொன்று, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளினால் விடயத்துக்கேற்றாற் போன்று, செய்து கையொப்பமிடப்பட்ட அல்லது மொழிந்து கையொப்பமிடப்பட்ட அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான விடயத்திற்கேற்றாற்போன்று, சத்தியமொன்றுடன் அல்லது உறுதியுரையொன்றுடன் சேர்த்தனுப்பப்பட்டதாகவிருத்தல் வேண்டும். அத்தகைய சத்தியத்துடன் அல்லது உறுதியுரையுடன் சேர்த்தனுப்பப்பட்டதான அத்தகைய பெயர்குறித்த நியமனம் கிடைக்கப்பெற்றதன்மீது, அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென அத்தகைய ஆளை அந்த உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், எல்லா நோக்கங்களுக்காகவும், இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உறுப்பினரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன், கடைசியாக முற்போந்த பொதுத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் தற்போதைய பதவிக்காலம் முடிவடையும்வரை மட்டுமே பதவி வகித்தல் வேண்டும் :

ஆயின், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளர் அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி அவர் அழைக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளும் மேற்குறிப்பிட்ட முறையிலும் அவ்வாறு பெயர் குறித்து நியமனம் செய்வதற்குத் தவறுகின்றவிடத்து, அமைச்சர் அவ்வாறு செய்வது உகந்ததென அவர் கருதும், எப்போதாயினும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தேர்தலொன்றை நடாத்தும்படி தேர்தல்கள் ஆணையாளரைப் பணிக்கலாம். அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், கடைசியாக முற்போந்த பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் தற்போதைய பதவிக்காலம் முடிவடையும்வரை மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

(6) உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர்களின் பொதுத் தேர்தலொன்றினை நடாத்துதல் தொடர்பான இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், (5) ஆம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்படும் ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒவ்வொரு தேர்தல் தொடர்பிலும் எட்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள திரிபுகளுக்கு அமைவாக, ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) ஏதேனும் உள்ளூரதிகாரசபையிலுள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கென (5) ஆம் உட்பிரிவின் கீழ் தேர்தலொன்று நடாத்தப்படும்போது, அத்தகைய உள்ளூரதிகாரசபையின் மாநகர முதல்வரினதும் பிரதி மாநகர முதல்வரினதும் பதவிகள் வெற்றிடமாயிருக்

கின்றவிடத்து, தேர்தல்கள் அலுவலர், அத்தகைய தேர்தலின்பின்னர் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையில், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஆகக்கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டுள்ளதோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் நியமனப்பத்திரத்தில் எந்த உறுப்பினர்களின் பெயர்கள் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் காணப்படுகின்றனவோ அந்த உறுப்பினர்கள், அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்களென அத்தகைய தேர்தலின் பின்னர் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(8) உள்ளூரதிகாரசபையொன்றிலுள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கென (5) ஆம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றின் பின்னர் அத்தகைய உள்ளூரதிகாரசபையில் ஒன்றுக்கு மேற்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஆகக்கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றவிடத்து, (7) ஆம் உட்பிரிவின்கீழ், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் நியமனப்பத்திரத்திலிருந்து மாநகர முதல்வரும் பிரதி மாநகர முதல்வரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்களென வெளிப்படுத்தப்படவேண்டுமோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் நியமனப் பத்திரத்தைத் தீர்மானித்தலானது, தேர்தல்கள் அலுவலரின் சமூகத்தில் இழுக்கப்படும் திருவுளச்சீட்டு மூலம் அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் செய்யப்படல் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவிலும் (8) ஆம் உட்பிரிவிலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று தொடர்பாக "நியமனப்பத்திரம்" என்பது, அந்த உள்ளூரதிகார சபையின் உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தலில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரம் என அல்லது அத்தகைய நியமனப்பத்திரத்தில் எந்த வேட்பாளர்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த வேட்பாளர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து அல்லது அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அத்தகைய பொதுத்தேர்தலில் நியமனப்பத்திரமொன்றைச் சமர்ப்பிக்காதிருந்தவிடத்து, (5) ஆம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரம் எனப் பொருளாகும்.".

6. பின்வரும் அட்டவணை ஏழாம் அட்டவணையை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் எட்டாம் அட்டவணையாகப் பயனுறுதலும் வேண்டும்:— **முதன்மைச் சட்டவாக்கத்தில் எட்டாம் அட்டவணையை உட்புகுத்துதல்.**

**'எட்டாம் அட்டவணை [பிரிவு 65அ (6)]**

1. **" மாநகர முதல்வரும் பிரதி மாநகர முதல்வரும் உட்பட " என்ற சொற்கள் கட்டளைச்சட்டத்தின் 28(2) ஆம் பிரிவிலிருந்து விட்டுவிடப்பட்டாற் போன்று.**

2. **பிரிவு 28(3) கட்டளைச்சட்டத்திலிருந்து விட்டுவிடப்பட்டாற்போன்று.**

3. கட்டளைச்சட்டத்தின் 36(1) (ஆ) என்னும் பிரிவின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளுக்குப் பதிலாகப் பின்வருவன இடப்பட்டாற்போன்று :—

"அத்தகைய உள்ளூர் அதிகாரசபையில் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான, அத்தகைய நியமனப் பத்திரத்தில் அவர்களது பெயர்கள் காணப்படும் ஒழுங்கில் உள்ள வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.".

4. கட்டளைச்சட்டத்தின் 38(1) (ஆ) என்னும் பிரிவிலிருந்தும் 45(1) (ஆ) என்னும் பிரிவிலிருந்தும் "மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும்" என்னும் சொற்கள் விட்டுவிடப்பட்டாற்போன்று.

5. கட்டளைச்சட்டத்தின் 65(1) (அ) என்னும் பிரிவிலிருந்து "மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் அத்துடன்" என்னும் சொற்கள் விட்டுவிடப்பட்டாற்போன்று.

6. கட்டளைச்சட்டத்திலிருந்து 65(1) (இ) என்னும் பிரிவு விட்டுவிடப்பட்டாற்போன்று.

7. கட்டளைச்சட்டத்தின் 65(2) (அ) என்னும் பிரிவிலிருந்து "ஏனைய" என்ற சொல் விட்டுவிடப்பட்டாற்போன்று.

8. கட்டளைச்சட்டத்தின் 65(2) (இ) என்னும் பிரிவிலிருந்து "மாநகர முதல்வரும் பிரதி மாநகர முதல்வரும் தவிர்ந்த" என்ற சொற்கள் விட்டுவிடப்பட்டாற்போன்று.

9. கட்டளைச்சட்டத்தின் 65(2) (ஈ) என்னும் பிரிவிலிருந்து "(மாநகர முதல்வர் எனவும் பிரதி மாநகர முதல்வர் எனவும் வெளிப்படுத்தப்பட்ட வேட்பாளர் தவிர்ந்த)" என்னும் சொற்கள் விட்டுவிடப்பட்டாற்போன்று.

10. கட்டளைச்சட்டத்தின் 66 ஆம் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்பட்டாற்போன்று :—

"முடிவை வெளியிடுதல்.

66. பிரிவு 65அ(5) என்பதன்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் தேர்தலின் முடிவை வெளிப்படுத்தியதன் மேல், தெரிவத்தாட்சி அலுவலர்—

(அ) உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களைக் குறித்துரைக்கும் அறிவித்தல் ஒன்றை வெளியிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) தேர்தல் இடப்பரப்பானது எம்மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அம்மாவட்டத்தின் தேர்தல் அலுவலருக்கூடாக முடிவை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்; அவர் அம்முடிவைப் பெற்றதன்மேல் உடனடியாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களைக் கசெற்றில் வெளியிடுமாறு செய்வித்தல் வேண்டும்." '.

உள்ளூரதிகார சபைகளுக்கான குறித்த சில தேர்தல்களையும் உள்ளூரதிகார சபை உறுப்பினர்களின் குறித்த சில செயல்களையும் செல்லுபடியுடையனவாக்குதல்.

7. (1) ஆள் ஒருவர் 1982 சனவரி 1 ஆம் தேதிக்குப் பிந்தியதும் இச் சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்தியதுமானதாக இருக்கும், உள்ளூரதிகார சபையொன்றுக்கான தேர்தல் தேதியன்று—

(அ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள உத்தியோகமொன்றை வகிக்கின்ற அரசாங்கத் திணைக்களமொன்றின் அலுவலர் ஒருவராக ;

(ஆ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 7,200 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள உத்தியோகமொன்றை வகிக்கின்ற ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவராக ; அல்லது

(இ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள பதவியொன்றை வகிக்கின்ற உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் ஒருவராக,

அத்தகைய ஆள் இருந்தார் என்ற காரணத்துக்காக மட்டும் அவர் உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவராகத் தெரிவுசெய்யப்படுவதிலிருந்து தகைமையற்றவராக்கப்பட்டவராகக் கருதப்படுதல் ஆகாது.

(2) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவர் 1982 சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைவதுமான ஏதேனும் காலப்பகுதியின்போது—

(அ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள உத்தியோகமொன்றை வகிக்கின்ற ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒருவராக ;

(ஆ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 7,200 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள உத்தியோகமொன்றை வகிக்கின்ற ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவராக ; அல்லது

(இ) சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவாக அல்லது அதிலும் அதிகமாக உள்ள பதவியொன்றை வகிக்கின்ற உள்ளூராட்சிச் சேவை உறுப்பினர் ஒருவராக,

இருந்தார் என்ற நிகழ்வின் காரணத்துக்காக மட்டும், அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்து அல்லது வாக்களிப்பதிலிருந்து தகைமையற்றவராக ஆக்கப்பட்டிருக்கிறாரென அல்லது தகைமையற்றவராக்கப்படுவாரெனக் கருதப்படுதல் ஆகாது.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 9 (1) (ஈ) (V) அல்லது (Vi) என்னும் பிரிவின் அல்லது 9 (1) (ஒ) என்னும் பிரிவின் செயற்பாடு காரணமாக உள்ளூரதிகார சபையொன்றில் எழும் ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அத்தகைய

ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர் ஒருவராகச் செய்யப்பட்ட எவரேனும் ஆளின், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னரான நியமனத்தை, (2) ஆம் உட்பிரிவிலுள்ளது எதுவும் பாதித்துள்ளதாக அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.

(4) இப்பிரிவில், "உள்ளூர் அதிகாரசபை" என்பது முதன்மைச் சட்டவாக்கத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

## பாகம் II

### 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் தேர்தல்கள் சட்டத்திற்கான திருத்தங்கள்

**1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

8. இச்சட்டத்தின் இந்தப் பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "பந்திகள் (அ), (இ), (ஈ), (உ)," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பந்திகள் (அ), (இ), (ஈ) (i), (ii), (iii), (iv), (v), (vi), (ix), (x), (உ)" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(ஆஆ) (i) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும், 1970 நவம்பர் 18 ஆந் தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்கு அல்லது அடுத்துப்பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை; அல்லது

(ii) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஒரு பதவிக்கு அத்தேதியன்று ஏற்புடைத்தாகும் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் முதலிற் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை,

வகிக்கின்ற ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒருவராக அத்தகைய ஆள் இருப்பின்; அல்லது

(ஆஆஆ) (i) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும் 1970, நவம்பர் 18 ஆந் தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 7,200 ரூபாவுக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்கு குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை ; அல்லது

(ii) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு பதவிக்கு அத்தேதியன்று ஏற்புடைத்தாகும் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப்பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின் கீழ் முதலிற் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் உத்தியோகத்தை,

வகிக்கின்ற ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவராக அத்தகைய ஆள் இருப்பின் ;" ; அத்துடன்

(இ) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்துக்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலமும் :—

" ஆயின் இதனகத்து அடங்கியுள்ள எதுவும்—

(i) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியொன்றின் விடயத்தில், அத்தேதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்கு அல்லது அடுத்துப்பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் ஏதேனும் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததும் ; அல்லது

(ii) 1970, நவம்பர் 18 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட பதவியொன்றின் விடயத்தில், அப்பதவி உருவாக்கப்பட்ட தேதியன்று (i) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு பதவிக்கு ஏற்புடைத்தான சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளத்துக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் முதலிற் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததும்,

ஆன பதவியொன்றை வகிக்கின்ற ஆள் ஒருவர், தேர்தல் நேரத்தில் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்டிராத அல்லது அத்தகைய தேர்தலுக்கு நேர்முந்திய ஓராண்டுக் காலப்பகுதியின்போது தொழிலுக்கமர்த்தப்பட்டிராத அபிவிருத்திச் சபைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு அவர் நாடினல், அவருக்கு விசாவித்தல் ஆகாது ; அல்லது ".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(2) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினல் அல்லது சுயேச்சைக்குழுவொன்றினல் பெயர்குறித்து நியமிக்கப்படவுள்ள வேட்பாளர் ஒவ்வொருவரினதும் எழுத்திலான சம்மதம் நியமனப் பத்திரத்தில் புறக்குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வேட்பாளரினல், விடயத்திற்கேற்றூற்போன்று, செய்து கைழொப்பமிடப்பட்ட அல்லது மொழிந்து கைழொப்பமிடப்பட்ட அரசியலமைப்பிற்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான, விடயத்திற்கேற்றூற்போன்று சத்தியமொன்று அல்லது உறுதியுரையொன்று அந்நியமனப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஈ) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர்களின் சம்மதம் நியமனப்பத்திரத்தில் புறக்குறிப்பிடப்படாதிருக்கின்றவிடத்து அல்லது ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர்களின், அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியம் அல்லது உறுதியுரை நியமனப்பத்திரத்துடன் இணைக்கப்படாதிருக்கின்றவிடத்து ; அல்லது".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவானது அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

'(6) அத்தகைய தகவல் கிடைக்கப்பெற்றதன்மேல், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென அத்தகைய கட்சியின் அல்லது குழுவின் உறுப்பினர் ஒருவரைப் பெயர்குறித்து நியமனம் செய்யுமாறு, ஆசனத்தை வெற்றிடமாக்கிய உறுப்பினர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சார்ந்தவரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது சுயேச்சைக்குழுவின் குழுத் தலைவரை ஆணையாளர் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினல் அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரினல் இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்

பட்ட பெயர் நியமனமொன்று அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளினுல், விடயத்துக்கேற்றுற்போன்று, செய்து கையொப்பமிடப்பட்ட அல்லது மொழிந்து கையொப்பமிடப்பட்ட அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான, விடயத்திற்கேற்றுற்போன்று சத்தியமொன்றுடன் அல்லது உறுதியுரையொன்றுடன் சேர்த்தனுப்பப்பட்டதாக இருத்தல் வேண்டும். அத்தகைய சத்தியத்துடன் அல்லது உறுதியுரையுடன் சேர்த்தனுப்பப்பட்டதான அத்தகைய பெயர் நியமனம் கிடைக்கப்பெற்றதன்மீது ஆணையாளர் எவ்வபிவிருத்திச் சபை தொடர்பாக வெற்றிடம் ஏற்பட்டதோ அவ்வபிவிருத்திச் சபையின் உறுப்பினர் ஒருவராக அத்தகைய ஆளை வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட உறுப்பினரின் பெயரைக் கசெற்றில் வெளியிடச்செய்தலும் வேண்டும் :

ஆயின், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி அவர் அழைக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளும் மேற்குறிப்பிட்ட முறையிலும் அவ்வாறு நியமனம் செய்வதற்குத் தவறுகின்றவிடத்து, ஆணையாளர் உடனடியாக அமைச்சருக்குத் தகவல் தருதல்வேண்டும். அவர், அத்தகைய தகவல் அவருக்குக் கிடைக்கப்பெற்றதன் மீது அவ்வாறு செய்வது உகந்ததென அவர் கருதும் எக்கட்டத்திலேனும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென தேர்தலொன்றை நடாத்தும்படி ஆணையாளரைப் பணிக்கலாம். அபிவிருத்திச் சபைகளுக்குரிய தேர்தல்களை நடாத்துதல் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்திற்குரிய நாலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திரிபுகளுக்கமைவாக, இக்காப்புவாசகத்தின்கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றுக்கு ஏற்புடையனவாதலும் தொடர்புடையனவாதலும் வேண்டும். இப்பிரிவின்கீழ் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளையொன்றினைப் பின்பற்றி நடாத்தப்பட்ட தேர்தலொன்றில் அபிவிருத்திச் சபையொன்றின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) அபிவிருத்திச் சபையொன்றிலுள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கென (6) ஆம் உட்பிரிவின்கீழ் தேர்தலொன்று நடாத்தப்படும் போது அத்தகைய அபிவிருத்திச் சபையில் தவிசாளர் பதவி வெற்றிடமாயிருக்கின்றவிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தேர்தலின் பின்னர், அத்தகைய சபையில் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஆகக்கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டுள்ளதோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் நியமனப்பத்திரத்தில் எந்த உறுப்பினரின் பெயர் முதலாவதாக காணப்படுகின்றதோ அந்த உறுப்பினர், தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென அத்தகைய தேர்தலின் பின்னர், வெளிப்படுத்துதல் வேண்டும்.

(8) அபிவிருத்திச் சபையொன்றிலுள்ள வெற்றிடமொன்றை நிரப்புவதற்கென (6) ஆம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலொன்றின் பின்னர், அத்தகைய அபிவிருத்திச் சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஆகக்கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றவிடத்து, (7) ஆம் உட்பிரிவின்கீழ், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் நியமனப்பத்திரத்திலிருந்து தவிசாளர் தேர்ந்தெடுக்கப்பட்டாரென வெளிப்படுத்தப்படவேண்டுமோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் நியமனப்பத்திரத்தைத் தீர்மானித்தலானது, தெரிவத்தாட்சி அலுவலரின் சமூகத்தில் இழுக்கப்படும் திருவுளச்சீட்டு மூலம் அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் செய்யப்படல் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவிலும் (8) ஆம் உட்பிரிவிலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று தொடர்பாக "நியமனப்பத்திரம்" என்பது, அச்சபையின் உறுப்பினர்களுக்கான பொதுத் தேர்தலில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரம் என அல்லது அத்தகைய நியமனப்பத்திரத்தில் எந்த வேட்பாளர்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த வேட்பாளர்களனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து அல்லது அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அத்தகைய பொதுத்தேர்தலில் நியமனப்பத்திரமொன்றைச் சமர்ப்பிக்காதிருந்தவிடத்து, (6) ஆம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட தேர்தலில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரம் எனப் பொருளாகும்.'.

**முதன்மைச் சட்டவாக்கத்தில் நாலாம் அட்டவணையை உட்புகுத்துதல்.**

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றும் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் அட்டவணை இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் நாலாம் அட்டவணையாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'நாலாம் அட்டவணை

[65 (6) ஆம் பிரிவு]

1. சட்டத்திலிருந்து, 18 (1) (ஆ) ஆம் பிரிவு நீக்கப்பட்டாற்போன்று.

2. சட்டத்தின் 18 (2) ஆம் பிரிவிலிருந்து "தவிசாளரின் பெயரும்" என்ற சொற்கள் நீக்கப்பட்டாற்போன்று.

3. சட்டத்திலிருந்து 58 (1) (எ) என்னும் பிரிவு நீக்கப்பட்டாற்போன்று.

4. சட்டத்தின் 60 ஆம் பிரிவிலிருந்து, "தவிசாளரின் பெயரும்" என்ற சொற்கள் நீக்கப்பட்டாற்போன்று.'.

## பாகம் III

### மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்துக்கும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்துக்குமான திருத்தங்கள்

13. மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 286 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அக் கட்டளைச்சட்டத்தின் 286அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— *252 ஆம் அத்தியாயத்தில் 286 அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

"குறித்த சில விடயங்களில் சபையினதும் மாநகர முதல்வரினதும் தத்துவங்களை ஆணையாளர் பிரயோகித்தல்.

286அ. மாநகர முதல்வரும் பிரதி மாநகர முதல்வரும் பதவி வகிக்காதொழிவதன் காரணமாக சபையானது அதன் பணிகளை நிறைவேற்ற முடியாதிருக்கின்றவிடத்து, ஆணையாளர், அப்பதவிகள் தொடர்பில் வெற்றிடங்கள் ஏற்பட்டதற்கும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கிணங்க அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கும் இடையேயுள்ள ஏதேனும் காலப்பகுதியின்போது இக் கட்டளைச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் சபைக்கு, மாநகர முதல்வருக்கு அல்லது பிரதி மாநகர முதல்வருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட எல்லா உரிமைகளையும், சிறப்புரிமைகளையும், தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கொண்டிருத்தலும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.".

14. நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 184 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அக் கட்டளைச்சட்டத்தின் 184அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— *255 ஆம் அத்தியாயத்தில் 184 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

"குறித்த சில விடயங்களில் சபையினதும் தலைவரினதும் துணைத் தலைவரினதும் தத்துவங்களை செயலாளர் பிரயோகித்தல்.

184அ. நகர சபைத் தலைவரும், துணைத் தலைவரும் பதவி வகிக்காதொழிவதன் காரணமாக நகர சபையானது அதன் பணிகளை நிறைவேற்ற முடியாதிருக்கின்றவிடத்து, செயலாளர், அப்பதவிகள் தொடர்பில் வெற்றிடங்கள் ஏற்பட்டதற்கும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கிணங்க அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கும் இடையேயுள்ள ஏதேனும் காலப்பகுதியின்போது இக்கட்டளைச் சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் சபைக்கு, தலைவருக்கு அல்லது துணைத் தலைவருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட எல்லா உரிமைகளையும் சிறப்புரிமைகளையும், தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கொண்டிருத்தலும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.".

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*